# உயர்நிலைப் பள்ளியில் EQAO தேர்வுகள்

## பெற்றோர்களுக்கான ஒரு வழிகாட்டி

**Education Quality and Accountability Office**

EQAO



வாசித்தல், எழுதுதல் மற்றும் கணிதத் திறன்கள், முதன்மைப் பிரிவு (கிரேடுகள் 1-3) மற்றும் ஜூனியர் பிரிவு (கிரேடுகள் 4-6) ஆகியவற்றின் மதிப்பீடுகள்

உயர்நிலைப் பள்ளியில் ஒண்டாரியோ மாணவர்கள் எழுதுகின்ற இரண்டு EQAO தேர்வுகளைப் பற்றியும் உங்கள் பிள்ளையை ஆதரிப்பதற்கு இத்தேர்வுகளின் முடிவுகளை நீங்கள் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது குறித்தும் நீங்கள் புரிந்துகொள்ள இந்த சிற்றேடு உதவிடும்.

ஒண்டாரியோ முழுவதிலுமுள்ள மாணவர்கள் தங்களின் வாசித்தல், எழுதுதல் மற்றும் கணிதத் திறன்களின் மாகாணம் தழுவிய மதிப்பீடுகளை தங்களின் தொடக்கநிலைப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் முக்கிய நிலைகளில் எழுதுகின்றனர்.

| | |
|---|---|
| கிரேடு 3 | முதன்மைப் பிரிவின் இறுதியில் கல்வியறிவு மற்றும் கணிதத் திறன் சோதிக்கப்பட்டது |
| கிரேடு 6 | ஜூனியர் பிரிவின் இறுதியில் கல்வியறிவு மற்றும் கணிதத் திறன் சோதிக்கப்பட்டது |
| கிரேடு 9 | மேல்நிலைப் பள்ளியின் முதல் வருடத்தில் கணிதத் திறன் சோதிக்கப்பட்டது |
| கிரேடு 10 | ஒரு அளவுக்கோடு தேவைப்படுவதால் கல்வியறிவு சோதிக்கப்பட்டது |

இத்தேர்வுகள் கீழ்கண்டவர்களால் நிர்வகிக்கப்படுகின்றன Education Quality and Accountability Office (EQAO), கல்வி அமைச்சகத்தின் மதிப்பீடு ஒரு கையடக்க முகமை.

## வாசித்தல், எழுதுதல் மற்றும் கணிதத் திறன்கள், முதன்மைப் பிரிவு (கிரேடுகள் 1-3) மற்றும் ஜூனியர் பிரிவு (கிரேடுகள் 4-6) ஆகியவற்றின் மதிப்பீடுகள் குறித்து

- கிரேடு 3-ன் இறுதியில் மாணவர்கள் கற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் வாசித்தல், எழுதுதல் மற்றும் கணிதத் திறன்களை முதன்மை-பிரிவு மதிப்பீடு சோதிக்கிறது.
- கிரேடு 6-ன் இறுதியில் மாணவர்கள் கற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் வாசித்தல், எழுதுதல் மற்றும் கணிதத் திறன்களை முதன்மை-பிரிவு மதிப்பீடு சோதிக்கிறது.
- இத்தேர்வு மே மாத இறுதியிலும் ஜூன் மாத தொடக்கத்திலும் இரண்டு-வார காலத்திற்கு நடைபெறும். இக்காலக் கட்டத்தில் ஒவ்வொரு பள்ளியும் தனது மிகச் சரியான தேர்வுத் தேதிகளை தீர்மானிக்கின்றன.

ஒண்டாரியோவின் மாகாணம் தழுவிய தேர்வுத் திட்டத்தில் இவை தான் முதல் இரண்டு மதிப்பீடுகளாகும். மாகாணத்துக்குரிய தரநிலைகள் தொடர்பான உங்கள் குழந்தையினுடைய செயல்நிறைவேற்றம் குறித்த முக்கியத் தகவல்களை அவை வழங்குகின்றன.

## EQAO தேர்வுகளை என் பிள்ளை எடுத்துக்கொள்ள வேண்டுமா?

ஒண்டாரியோவில் உள்ள வெளிப்படையாக மானியமளிக்கப்பட்ட பள்ளிகளில் கலந்துகொள்ளும் அனைத்து மாணவர்களும் *ஒண்டாரியோ பாடத்திட்டத்தை* பின்பற்றுபவர்களும் EQAOவின் மாகாணம் சார்ந்த மதிப்பீடுகளில் பங்கேற்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறார்கள். இத்தகைய தேர்வுகள் மாகாணத்தினுடைய கல்வித் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

பிரத்யேகக் கல்வித் தேவைகளைக் கொண்டுள்ள மாணவர்களுக்காக, தொடர்ச்சியான வகுப்பறை மதிப்பீட்டு நடைமுறைகளுக்கு ஏற்ற சில இடவசதிகள் அனுமதிக்கப்படுகின்றன. ஆங்கில மொழியைக் கற்றுக் கொள்பவர்களுக்கு பிரத்யேக ஒதுக்கீடுகளும் கூட அனுமதிக்கப்படுகின்றன. ஒரு மாணவரால் அனைத்து அல்லது பகுதியளவு தேர்வில் பங்கேற்க இயலவில்லை எனில் - அவருக்கு இடவசதிகள் அளிக்கப்பட்டிருந்தும் கூட - பள்ளியின் முதல்வர் அவன் அல்லது அவளுக்கு பள்ளி ஊழியர் மற்றும் பெற்றோர்கள் அல்லது காப்பாளர்களுடன் கலந்துரையாடி விலக்களிக்கக் கூடும்.

## EQAO தேர்வுகளில் என்ன இருக்கிறது?

EQAO தேர்வில் உள்ள ஒவ்வொரு கேள்வியும், ஒண்டாரியோ முழுவதுமுள்ள வகுப்பறைகளில் பிள்ளைகளுக்கு கற்றுத் தரப்படும் *ஒண்டாரியோ பாடத்திட்டத்தில்* வரையறுக்கப்பட்டுள்ள கற்றல் எதிர்பார்ப்புகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.



## இத்தேர்வுகளுக்காக என் பிள்ளை படிக்க வேண்டுமா?

அனைத்து வகுப்பறை அறிவுறுத்தல்களின் ஆதாரமான *ஒண்டாரியோ பாடத்திட்டத்தை* EQAO தேர்வுகள் முழுவதுமாக அடிப்படையாகக் கொண்டுள்ளதால், இத்தேர்வுகளுக்கென பிரத்யேகத் தயார்படுத்துதல் தேவைப்படாது. கீழ்கண்டவற்றுக்கான மாணவர்களின் இயலுந்தன்மையை EQAO'வின் தொடக்கப்பள்ளித் தேர்வுகள் அளவிடுகின்றன

- அவர்கள் வெவ்வேறு விதமான உரைகளில் எதை வாசிக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்வதற்கு;
- பொருத்தமான இலக்கணம், எழுத்துக்கோர்வை மற்றும் நிறுத்தல் குறி ஆகியவற்றைப் பயன்படுத்தி எழுத்துப்பூர்வமாக தங்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கு
- பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குப் பொருத்தமான கணிதத் திறன்களைப் பயன்படுத்துவதற்கு.

இத்தகைய அடிப்படைக் கல்வியறிவு மற்றும் கணிதத் திறன்கள் பள்ளியின் கல்வியாண்டு முழுவதும் கற்றுத் தரப்படலாம் மற்றும் கற்றுத் தரப்பட வேண்டும் மற்றும் அவை அனைத்துப் பாடங்களிலும் வலிமைப்படுத்தப்பட வேண்டும்.

## இத்தேர்வுகளை எழுதுவதில் என் பிள்ளைக்கு நான் எவ்வாறு ஆதரவளிக்க முடியும்?

வருடம் முழுவதும் பள்ளியில் அவன் அல்லது அவளது வெற்றியை ஆதரிப்பதே இத்தேர்வுகளில் உங்கள் பிள்ளை எழுத ஆதரவளிப்பதற்கான சிறந்த வழியாகும். மாகாணரீதியான தேர்வுகளின் வடிவத்துடனும் கேட்கப்படும் கேள்விகளின் வகைகளுடன் உங்கள் பிள்ளை பரிச்சயமாக உதவுவதற்கு www.eqao.com -ல் வெளியிடப்பட்டுள்ள தேர்வு தொடர்பான உதவிகளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## EQAO முடிவுகள் எப்போது மற்றும் எவ்வாறு வெளியிடப்படும்?

அடுத்த பள்ளிக் கல்வியாண்டின் செப்டம்பர் மாதத்தில் முடிவுகள் வெளியிடப்படும். உங்கள் பிள்ளை EQAO'வின் தனிப்பட்ட மாணவர் அறிக்கையை, அலது ISR-ஐ அவன் அல்லது அவளுடைய பள்ளியிடமிருந்து நேரடியாகப் பெறுவார்.

## EQAO முடிவுகள் எவ்வாறு அறிவிக்கப்படுகின்றன?

EQAO முடிவுகள் மாகாணத்தின் நான்கு செயல்நிறைவேற்ற நிலைகளுக்கு இணங்க அறிவிக்கப்படுகின்றன. வகுப்பறைகளில் ஆசியர்கள் பயன்படுத்துகின்ற மற்றும் உங்கள் பிள்ளையின் மேம்பாட்டை பகுப்பாய்வு செய்வதற்கான அறிக்கை அட்டைகளின் மீதுள்ள அதே நிலைகள் தான் இவை. மாகாணரீதியான தரநிலை என்பது நிலை 3 ஆகும், இது B- முதல் B+ வரையிலான ஒரு நிலைக்கு தொடர்பு கொள்கிறது.

## EQAO முடிவுகள் என்னுடைய பிள்ளையின் கிரேடுகளில் தாக்கம் ஏற்படுத்துமா?

மாகாணரீதியான தேர்வுகளின் முடிவுகள் மாணவர்களின் கிரேடுகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. உங்கள் பிள்ளையின் கற்றல் திறனை மதிப்பீடு செய்வதற்கும் ஆதரிப்பதற்கும் உங்களுக்கு உதவிடும் பொருட்டு, இவை அறிக்கை அட்டை கிரேடுகளுடன் கருதப்பட வேண்டிய கூடுதல் தகவல்களை வழங்குகின்றன.

## என்னுடைய பிள்ளை குறித்து EQAO முடிவுகள் எனக்கு என்ன கூறுகின்றன?

EQAO தேர்வு முடிவுகள் என்பது மாகாணத்துக்குரிய தரநிலைகள் தொடர்பான உங்கள் பிள்ளையினுடைய செயல்நிறைவேற்றத்தின் முக்கிய சுட்டிக்காட்டியாகும். தேர்வுகளில் தரநிலையை (நிலைகள் 3 மற்றும் 4) அடைகின்ற அல்லது மிஞ்சுகின்ற மாணவர்கள், தேவைப்படும் பெரும்பாலான அல்லது அனைத்து வாசித்தல், எழுதுதல் மற்றும் கணித அறிவையும் அவர்களின் தற்போதைய நிலையில் எதிர்பார்க்கப்படும் திறன்களையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

முன்னதாக உள்ள கிரேடுகளில் மாகாணத்துக்குரிய தரநிலையை எட்டுபவர் உயர்நிலைப் பள்ளியில் கல்வியறிவு மற்றும் கணிதத்தில் சாதனை புரிவார் என வலுவாக கணிக்கப்படுகிறார். உங்கள் பிள்ளை கிரேடு 3 அல்லது கிரேடு 6ல் தரநிலையை எட்டுவதில்லை எனில், உங்கள் பிள்ளை வெற்றியடைய உதவுவதற்கு அதிக கவனம் தேவைப்படலாம்.

எனினும், உங்கள் பிள்ளை என்ன கற்றுக் கொண்டுள்ளார் என்பது குறித்த ஒரு முழுமையான விவரத்தை எந்தவொரு தேர்வினாலும் வழங்க முடியாது. EQAO தேர்வு முடிவுகளுடன் அறிவிக்கை அட்டை கிரேடுகள் மற்றும் வகுப்பறை மதிப்பீட்டு முடிவுகள் போன்ற மற்ற செயல்நிறைவேற்றம் செய்யப்பட்ட தகவல்களை கருத்தில் எடுத்துக் கொள்வதே உங்கள் பிள்ளையின் திறன்கள் மற்றும் அறிவை முழுவதுமாக மதிப்பிடுவதற்கான ஒரு சிறந்த வழியாகும்.

## இம்முடிவுகளை நான் எவ்வாறு சிறந்த முறையில் பயன்படுத்த முடியும்?

உங்கள் பிள்ளையின் EQAO முடிவுகளைக் கொண்டு செய்யவேண்டிய மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், உங்கள் பிள்ளையின் ஒட்டுமொத்த மேம்பாட்டின் சூழமைவை அவன் அல்லது அவளது ஆசிரியரைக் கொண்டு அவர்களிடம் கலந்துரையாடுவதேயாகும்.

நீங்கள் இவற்றைக் கலந்துரையாட விரும்பக் கூடும்

- EQAO முடிவுகள் மற்றும் உங்கள் பிள்ளையின் தற்போதைய வகுப்பறைப் பணி ஆகியவற்றுக்கு இடையேயான பாணிகள் ஏதேனும் உள்ளனவா;
- எந்த திறன்களுக்கு கூடுதல் கவனம் தேவைப்படுகிறது மற்றும்
- உங்கள் பிள்ளை தனது முழுமையான ஆற்றல்களைப் பெறமுடிவதை உறுதி செய்வதற்கு உங்களால் எவ்வாறு ஒன்றிணைந்து செயல்பட முடியும்.

## எதற்காக மாகாணம் தழுவிய தேர்வுகளை ஒண்டாரியோ மேற்கொள்கிறது?

*ஒண்டாரியோ பாடத்திட்டத்தில்* வரையறுக்கப்பட்டுள்ள வாசித்தல், எழுதுதல் மற்றும் கணிதத் திறன்களை மாணவர்கள் எவ்வளவு நன்றாகக் கற்றுக் கொள்கின்றனர் என்பது குறித்த ஒரு நம்பகமான அளவீட்டையும் குறிக்கோளையும் ஒண்டாரியோவின் மாகாணம் தழுவிய தேர்வுகள் வழங்குகின்றன. இத்தேர்வுகள் கீழ்கண்டவற்றுக்கு உதவுகின்றன

- தொடக்கநிலைப் பள்ளி முதல் மேல்நிலைப் பள்ளி வரையில் ஒவ்வொரு பிள்ளையின் செயல்நிறைவேற்றத்தையும் பின்தொடர்வதற்கு;
- பள்ளி, வாரியம் மற்றும் மாகாணரீதியான நிலைகளில் மாணவரது கற்றல் திறன்களில் உள்ள தற்போதைய போக்குகளை அடையாளம் காண்பதற்கு;
- கவனம் தேவைப்படுகின்ற பாடத்திட்டப் பகுதிகளை குறிப்பாகச் சுட்டிக்காட்டுவதற்கு மற்றும்
- பொதுக் கல்வி முறையின் பொறுப்புடைமையை வலிமைப்படுத்துவதற்கு.

## வகுப்பறைத் தேர்வுகளுக்குக் கூடுதலாக நமக்கு ஏன் EQAO தேர்வுகள் தேவைப்படுகின்றன?

EQAO தேர்வுகளும் வகுப்பறை தேர்வுகளும் வெவ்வேறு குறிக்கோள்களைக் கொண்டுள்ளன மற்றும் அவை வெவ்வேறு விதமான தகவல்களை வழங்குகின்றன.

## வகுப்பறைத் தேர்வுகள்

- குறிப்பிட்ட தகவல்களை மாணவர்கள் எவ்வளவு நன்றாகக் கற்றுக்கொண்டுள்ளனர் என்பதை அளவிடுகின்றன;
- கற்பிக்கும் உத்திகளை ஆசிரியர்கள் மாற்றிக்கொள்ள உதவும் வகையில் விரைவான முடிவுகளை அளிக்கின்றன;
- ஒவ்வொரு மாணவர் குறித்தும் ஆசிரியர் அறிந்து வைத்திருக்கும் தகவல்களை அடிப்படையாகக் கொண்ட உள்ளார்ந்த கூறுகளைக் கொண்டிருக்கலாம், மற்றும்
- பள்ளி, வாரியம் அல்லது மாகாணம் முழுவதையும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத முடிவுகளை வழங்குகின்றன.

## EQAO தேர்வுகள்

- மாகாணரீதியான தரநிலைகள் தொடர்பான மாணவர்களின் ஒட்டுமொத்த அறிவு மற்றும் திறன்களை மதிப்பிடுகின்றன;
- மாணவர்களுடைய கல்வியின் முக்கிய நிலைகளில் வழங்கப்படுகின்றன;
- ஒரு முரண்பாடற்ற மற்றும் பாரபட்சமற்ற முறையில் நிர்வகிக்கப்படுகின்றன, மதிப்பிடப்படுகின்றன மற்றும் வெளியிடப்படுகின்றன, மற்றும்
- வருடா வருடம் பள்ளி, வாரியம் மற்றும் மாகாணம் முழுவதையும் ஒப்பிட்டுப் பார்க்கும் வகையிலான முடிவுகளை வழங்குகின்றன.

வகுப்பறை தேர்வு முடிவுகளுடன் கூடவே EQAO தேர்வு முடிவுகளைக் கருத்தில் எடுத்துக் கொள்வது ஒவ்வொரு மாணவரின் கற்றுக்கொள்ளும் தன்மை குறித்த முழுமையான விவரங்களை வெளிப்படுத்தச் செய்கிறது.

மேலும் தகவல்களுக்கு www.eqao.com ஐ பார்வையிடவும்.

Cette publication est disponible en français.

Education Quality and Accountability Office
2 Carlton Street, Suite 1200, Toronto ON  M5B 2M9
1-888-327-7377 | www.eqao.com

© 2011 Queen's Printer for Ontario